# 404 வாக்குறுதிகளை நிறைவேற்றி சாதனை படைத்துள்ளோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சாதனையைச் செய்தது, திராவிட மாடல்! ஒன்றிய அரசே நிதி தர மறுத்து புறக்கணித்தாலும், அவர்கள் வெளியிடும் புள்ளிவிவரங்களில் எல்லாம் தவிர்க்கவே முடியாத அளவிற்கு முதலிடத்தில் இருக்கும் சாதனையைச் செய்தது, நம்முடைய திராவிட மாடல் அரசு!

தமிழ்நாட்டின் கஜானாவைச் சுரண்டிய கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியாளர்கள், மக்களால் விரட்டியடிக்கப்பட்ட பின்னர், என்ன என்னவெல்லாம் சொன்னார்கள். நாம் மகளிருக்கான உரிமைத் தொகையை வழங்க மாட்டோம் என்று சொன்னார்கள்! ஆனால், அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறோம் - செய்து கொடுத்திருக்கிறோம் - செய்து கொண்டிருக்கிறோம். ஒரு கோடியே 31 இலட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அக்கவுண்ட்டில் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அடுத்து என்ன சொன்னார்கள், போக்குவரத்துத் துறை நஷ்டத்தில் இயங்குகிறது, இதில் எங்கே இலவசப் பயணம் வழங்கப்போகிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த மறுநாளே, பெண்கள் எல்லோரும் நகரப் பேருந்துகளில் விடியல் பயணம் செய்ய முதல் கோப்பில், முதல் கையெழுத்திட்டவன்தான் இந்த ஸ்டாலின்!

சொன்னதை மட்டுமல்ல, மக்களுக்குத் தேவை என்று தோன்றியது என்றால், அது நாங்கள் சொல்லாததாக இருந்தாலும் செய்து கொண்டிருக்கிறோம்!

### அகில இந்தியாவே பாராட்டும் கழக அரசின் திட்டங்கள்!

தினமும் காலையில், 21 இலட்சம் குழந்தைகள் வயிறாரச் சாப்பிடும் காலை உணவுத் திட்டம், தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டமா?

48 இலட்சம் மாணவ - மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்திருக்கும் நான் முதல்வன் திட்டம், தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டமா? இல்லையே. ஆனால், இதையெல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிற்குத் தேவை. நம்முடைய பிள்ளைகளுக்குத் தேவை என்று அதைக் கொண்டு வந்தோம்! நாளைக்கு நம்முடைய பிள்ளைகள் வளர்ந்து, மாணவர்களாக படித்து, பெரிய பெரிய வேலைகளில் உட்காரும் போது, இந்த திட்டங்களைச் செயல்படுத்தியதற்காக நம்முடைய திராவிட மாடல் அரசை பாராட்டுவார்கள்!

### ரெக்கார்டை ‘பிரேக்’ செய்ய முடியாத அளவுக்குச் செய்வதே எனது பாலிசி!

இன்னும் சொல்கிறேன். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் என்று சொன்னாலே, பல தொழில் நிறுவனங்கள் பின்னங்கால் பிடரியில் அடிபட்டு தலைதெறிக்க ஓடினார்கள். ஆனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், 10 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை நாம் ஈர்த்திருக்கிறோம்! ரெக்கார்ட் செய்தால், ரெக்கார்டை பிரேக் செய்ய முடியாத அளவிற்கு செய்ய வேண்டும்! இதுதான் என் பாலிசி!

இன்னும்கூட சொல்கிறேன். 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு - 4000 கோயில்களில் குடமுழுக்கு - 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலான கோயில் சொத்துகள் மீட்டிருக்கிறோம் - அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகாலக் கோரிக்கையான பென்ஷன் திட்டம் - கடந்த நான்கரை ஆண்டுகளில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு முறை, மூன்று முறை நாம் பயணம் செய்து, அரசு விழாக்கள் மூலமாக, 40 இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியிருக்கிறோம்.

இப்போதுகூட, இந்தப் பொங்கல், மகிழ்ச்சிப் பொங்கலாக இருக்கவேண்டும் - அதற்காகத் தான் பொங்கல் பரிசாக 3 ஆயிரம் ரூபாய் தருகிறோம்!

இப்படி உங்கள் தேவைகளை உணர்ந்து, நல்ல பல திட்டங்களைச் செய்துகொண்டிருக்கும் உங்கள் திராவிட மாடல் அரசிடம், உங்களுடைய கனவுகளை நீங்களே சொல்ல வேண்டும் என்று உருவாக்கியிருப்பதுதான், இந்த ‘உங்க கனவ சொல்லுங்க’திட்டம்!

**இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள் - இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துக் குடும்பங்களையும், அரசின் சார்பாக நியமிக்கப்படுகின்ற தன்னார்வலர்கள், எங்கள் Team-ஐ சேர்ந்தவர்கள் உங்களைச் சந்திப்பார்கள். அவர்களிடம் உங்களின் கனவுகளைச் சொல்லுங்கள். அதையெல்லாம் அவர்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்துகொள்வார்கள்! அது எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தமிழ்நாட்டிற்கான ஒரு மாபெரும் கனவுத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன்! 2030-ஆம் ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வை கொண்டதாக, அந்த கனவுத்திட்டம் இருக்கும்! நான் உறுதியாக சொல்கிறேன்.**

இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள் - இன்றிலிருந்து முப்பது நாட்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துக் குடும்பங்களையும், அரசின் சார்பாக நியமிக்கப்படுகின்ற தன்னார்வலர்கள், எங்கள் Team-ஐ சேர்ந்தவர்கள் உங்களைச் சந்திப்பார்கள். அவர்களிடம் உங்களின் கனவுகளைச் சொல்லுங்கள். அதையெல்லாம் அவர்கள் டிஜிட்டல் முறையில் பதிவு செய்துகொள்வார்கள்!

### ஒரு இனத்தின் ஆட்சி இது!

பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் சொல்வார்கள்; “மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி; அவர்களிடமிருந்து கற்றுக்கொள்; அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தொடங்கு; அவர்களிடம் இருப்பதிலிருந்து கட்டுமானம் செய்! பணி முடிந்த பிறகு அவர்களுக்கு திருப்தியை ஏற்படுத்திவிட்டுத் திரும்பி வா” என்று சொன்னார். அண்ணா சொன்னதை எல்லாம், என்னுடைய இதயத்தில் வைத்து, செயல்படக் கூடியவன் தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! அதனால் தான், ஒரு கட்சியின் ஆட்சியாக இல்லாமல், ஒரு இனத்தின் ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம்!

### உங்கள் கனவுகள் நிறைவேறினால் தமிழ்நாடு முன்னேறும்!

ஆட்சி என்பது, முதலமைச்சரான என்னுடைய கனவுகளை மட்டுமல்ல, வாக்களித்த, வாக்களிக்காத உங்கள் எல்லோருடைய கனவுகளையும் நிறைவேற்றுவதற்கான கருவி! அப்படி, உங்கள் கனவுகளைக் கேட்டு, நிறைவேற்றும்போதுதான், உங்கள் குடும்பங்கள் முன்னேறும்! மகிழ்ச்சி அடையும்! உங்கள் கனவுகள் நிறைவேறினால், தமிழ்நாடும் முன்னேறும்! வளர்ச்சி அடையும்!

வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். நாம் கனவு கண்டால், நிச்சயம் நம்முடைய உழைப்பால் அதை நிறைவேற்றுவோம்!

சுயமரியாதையும் - சமத்துவமும் - பகுத்தறிவுமிக்க சமூகமாக, நம்முடைய தமிழ்ச் சமூகம் தலைநிமிர வேண்டும்; சமூகநீதி நிலைபெற வேண்டும்; ஒடுக்கப்பட்டோரின் குரல்கள் கேட்கப்பட வேண்டும்; எல்லோருக்குமான ஆட்சி அமைய வேண்டும் என்று தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் கனவு கண்டார்கள்! அதனால்தான் இன்றைக்கு நாம், எந்த ஆதிக்கத்திற்கும் தலைகுனியாமல் - வெல்வோம் ஒன்றாக என்று மண், மொழி, மானம் காக்க, நிமிர்ந்து நிற்கிறோம்! நாடே திரும்பிப் பார்க்கும் நம்பர் ஒன் மாநிலமாக இருக்கிறோம்!

## 7 முக்கியத் துறைகளில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவோம்!

அது எல்லாவற்றையும் ஆய்வு செய்து, தமிழ்நாட்டிற்கான ஒரு மாபெரும் கனவுத் திட்டத்தை அறிவிக்கப் போகிறேன்! 2030-ஆம் ஆண்டிற்கான தொலைநோக்குப் பார்வை கொண்டதாக, அந்த கனவுத்திட்டம் இருக்கும்! நான் உறுதியாக சொல்கிறேன். இந்தக் கனவுகளை எல்லாம் நான் நிறைவேற்றிக் காட்டும்போது,

- கிராமப்புற உள்கட்டமைப்புகள்
- நகர்ப்புற உள்கட்டமைப்புகள்
- மொழி மற்றும் பண்பாட்டு வெற்றிகள்
- கல்வி மற்றும் திறன் மேம்பாடுகள்
- சமூகங்களின் வளர்ச்சி
- விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்
- வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்சாலைகள் ஆகிய ஏழு துறைகளில், தன்னிறைவு பெற்ற தமிழ்நாடாக நம்முடைய மாநிலம் வளர்ந்திருக்கும்!

### தமிழ்நாட்டை தலைசிறந்த மாநிலமாக உயர்த்துவேன்!

இப்போது நாம் அடுத்தகட்ட கனவை காணவேண்டிய நேரம்! உறுதியாகச் சொல்கிறேன் - உங்கள் கனவுகளை நான் நிறைவேற்றுவேன்! உங்கள் கோரிக்கைகளை நான் திட்டங்களாக உருவாக்கித் தருவேன். உங்கள் எண்ணங்களுக்கு நான் உருவம் கொடுப்பேன். நம்முடைய தமிழ்நாட்டை, தலைசிறந்த மாநிலமாக உயர்த்துவேன்! இதுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் 2026 தேர்தலுக்குத் தரக்கூடிய வாக்குறுதி! நம்முடைய கனவு நனவாகும்! தமிழ்நாடு வெல்லும்! வெல்லும்! வெல்லும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## க. சுந்தர், எம்.எல்.ஏ., – க. செல்வம், எம்.பி. பங்கேற்பு!

# காஞ்சிபுரத்தில் மாபெரும் பொங்கல் பரிசு வழங்கும் விழா! சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்!

### அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – ஆர்.காந்தி பொங்கல் பரிசு வழங்குகின்றனர்!

*காஞ்சிபுரம், ஜன.10*

*முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளந்தலைவர் தஉதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்களின் ஏற்பாட்டில், 2026 பொங்கல் திருநாளை முன்னிட்டு, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் மாபெரும் நிகழ்வு, இன்று (10.01.2025) சனிக்கிழமை மாலை 04.00 மணியளவில், காஞ்சிபுரம், எஸ்.எம்.ஜி. திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.*

*மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் அவர்கள் இந்நிகழ்விற்கு தலைமை வகிப்பார். நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், பகுதி கழக செயலாளர்கள் கே. திலகர், எஸ். சந்துரு, அ.தசரதன், சு. வெங்கடேசன், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி. எம்.பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இவ்விழாவில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், அமைச்சர் ஆர். காந்தி ஆகியோர் கலந்துகொண்டு, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள, மாநகர, பகுதி, ஒன்றியக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய அளவிலான அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதி பாக முகவர்களான BLA 2 உள்ளிட்ட சுமார் 1800 நபர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கவுள்ளனர்.*

*இந்நிகழ்ச்சியில், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி, ஜெ.ராமகிருஷ்ணன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர், மாநகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச் செல்வம், வ. ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு. சுப்புராயன், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, கழக தொண்டர் அணி தலைவர் ஜி. சுகுமாரன், கழக நெசவாளர் அணி செயலாளர் டி.அன்பழகன், கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர்கள் வி.எஸ். ராமகிருஷ்ணன், பி. சுந்தரவரதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ. யுவராஜ், காஞ்சிபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் மலர் கொடி குமார், வாலாஜாபாத் ஒன்றியக்குழு பெருந்தலைவர் ஆர். கே. தேவேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் நித்யா சுகுமார், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எஸ். ராஜலட்சுமி குஜராத், மண்டலக் குழு தலைவர்கள் எஸ். மோகன், ஜி. சசிகலா கணேஷ், எஸ்.கே.பி. சாந்தி சீனிவாசன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் ஏராளமானோர் கலந்துக்கொள்ள உள்ளனர்.*

---

## நே.சிற்றரசு – தயாநிதி மாறன் – எழிலன் நாகநாதன் – வினோத் வேலாயுதம் – வே.கௌதமன் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திராவிட பொங்கலை முன்னிட்டு கிரிக்கெட் போட்டி!

### விளையாட்டு மேம்பாட்டு அணி ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி அமைப்பாளர் இ.என்.ரஞ்சித் தலைமை! வரதை தா.பரி – மு.மோகன் முன்னிலை!

*சென்னை, ஜன.10-*

*தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படி சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திராவிட பொங்கல் முன்னிட்டு ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நாளை (11.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணிக்கு கோடம்பாக்கம், டிரஸ்ட்புரம் மைதானத்தில் விளையாட்டு மேம்பாட்டு அணி ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி அமைப்பாளர் இ.என்.ரஞ்சித் தலைமையில் 112வது வட்டச் செயலாளர் வரதை தா.பரி, 112 (அ) வட்டச் செயலாளர் மு.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.*

*இப்போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசுகள் வழங்க வருகை தர இருக்கும் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வே.கௌதமன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர், ஜெசிகா, ராஜராஜ சோழன் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்து பரிசுகள் வழங்க உள்ளனர்*

*எனவே இந்நிகழ்ச்சியில் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிக்கு உட்பட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதிகளாக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

---

## சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு சிலம்பம் மல்லர் கம்பம் கபடிப் போட்டிகள்!

### பகுதிச் செயலாளர் வி.இ.மதியழகன் எம்.சி. ஏற்பாட்டில் நடைபெறுகிறது!

*சென்னை, ஜன. 10-*

*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்திலின்படி, சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில் நடைபெறும் திராவிட பொங்கல் விளையாட்டு போட்டிகள் பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் வி.இ.மதியழகன் ஏற்பாட்டில் இன்று (10.01.2026 சனிக்கிழமை) காலை 9 மணி அளவில், மாவட்ட அளவிலான சிலம்பம் போட்டி, மாலை 3 மணி அளவில் மல்லர் கம்பம் போட்டி நடைபெறுகிறது.*

*நாளை (11.01.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு, கபடிப் போட்டி நடைபெறுகிறது.*

*நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் பாலவாக்கம் க.சோமு, மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் விசுவநாதன், பாலவாக்கம் மூ. மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, எஸ்.ஏ.ஹரிகிருஷ்ணன், காஞ்சிபுரம் முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் வி.எட்டியப்பன், எம். பார்த்திபன்பா.அருண்குமார், கா.வி.தியாகராஜன், தடா ஓ.சுந்தரம், கி.ஸ்டாலின் மொழி, த.விஜயபாலன், ஜானகிராமன், மா.மகேஸ்வரன், விஜயகுமார், வி. எஸ்.சுதா, எம்.பாஸ்கரன், கே.வி.சாந்தப்பன், பி.எஸ். ஆறுமுகம், கே.குமார், ஏ.கே.ஆனந்த், கி.சத்தியவேலன், எஸ்.கர்ணா, க.ஏகாம்பரம், சீனிவாசன், பி.என். ஜோதி, பகுதி அமைப்பாளர் இரா.நாகேந்திறன் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு கிழக்கு மேற்கு ஒன்றியங்களில் தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் புத்தாடை மற்றும் பொங்கல் பரிசு வழங்கினார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், கூளூர் எம்.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர் சேகர், சி.ஜெயபாரதி, குருதாஸ், களம்பாக்கம் எம்.பன்னீர் செல்வம், பொன்.பாண்டியன், ரமேஷ், நிலவாதி சீனிவாசன், டி.தினகரன், ஜெகதீசன், சண்முகம், காஞ்சிபடி சரவணன், விநாயகம், யுவராஜ், குமார், கமலக்கண்ணன், மற்றும் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

# தலைமையா அடிமையா...



அழைத்தால் ஓடுகிற ஒரு அடிமையிடம்
ஆட்சி அகப்பட்டால்

அது மாநில ஆட்சியாக இருக்காது

கோமாளிகளின் காட்சியாகத் தான் இருக்கும்...

மேலும்

சுயமரியாதை பூகோளமான தமிழ்நாட்டின் வாக்காளர்கள்

ஒருபோதும் தங்களை ஆள்வதற்கு

ஒரு அடிமையை தேர்வு செய்ய மாட்டார்கள்..



**மருது அழகுராஜ்**

கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்